Subscription.
Inland: Rs. 30/- year
For Advertisement
Apply to:
The Manager,
'The Morning Star,'
182, First Cross Street
JAFFNA.

# THE MORNING STAR

Registered as a Newspaper at the General Post Office, Sri Lanka
under No. Q / J / 104 / News / 89
Established: 1841 : A Christian Weekly: Published Every Friday
Vol. 149 Jaffna, Friday, 30, 07 JULY 1989 No. 26 & 27
RIGHTEOUSNESS EXALTETH A NATION BUT SIN IS A REPROACH TO ANY PEOPLE

News and Articles in Tamil and English.
Please send them to
the EDITOR,
'The Morning Star,'
182, First Cross Street,
JAFFNA.

## WEDDINGS

*Devadharshanan*

*Jeanne.*

The marriage was solemnised between Samuel Devadharshanan Ambalavanar and Lisa Jeanne Campanello on Saturday the 30th of May at the Church of St. Leo, Corona, New York. Samuel is the youngest son of Mr. & Mrs D. S. Ambalavanar of Elmhurst New York and Lisa Jeanne is the daughter of Mr. & Mrs. Frank Campanello of Corona, New York.

*Thevarajah*

*Christina.*

The marriage was solemnised between Mr. P. Thevarajah, a Worker in charge of the Samathanapuram Church in the Diocese and Miss Christina Chelliah at the Karainagar Church on Saturday the 10th of June at 10·00 a. m. The Pastor of the Church the Rev. A. V. Jesuthasan conducted the service. The Rt. Rev. D. J. Ambalavanar solemnised the marriage and the Rev. Daniel Thiagarajah preached the homily. Thevarajah is the son of Mr. & Mrs. Pasupathy of Karainagar and Christina is a daughter of Mr. & Mrs. Chelliah of Chankanai.

## COLOMBO CHURCH FELICITATES DR. HENRY RAJARATNAM

The members of the Colombo Church and other friends felicitated Dr. Henry Rajaratnam on his being elected a Fellow of the Royal College of Physicians (F. R. C. P.), England on Monday the 5th of June at 6-30 p. m. The felicitation took the form of a Thanksgiving Service at the Colombo Church conducted by the Pastor the Rev. T. S. Premarajah. The Rev. James Ratnayagam also took part in the Service. The Rt. Rev. D. J. Ambalavanar preached the sermon. Mr. C. D. Chinnakone, one of the lay elders of the Church made a brief felicitation speech. A special song composed for the occasion by Mr. Ramanathan, another senior member of the Church was sung by the choir. Dr. Henry Rajaratnam made an appropriate response with the testimony of faith as a Christian doctor. A fellowship dinner followed the Service.

## FLOOD RELIEF — SOUTH SRI LANKA.

The Jaffna Diocese of the C. S. I. has sent a contribution of Rs. 10,000/- to the Bishop of Colombo for the flood relief work undertaken by the Colombo Diocese in the South. It has been observed that the damage inflicted by the floods on life and property in the Ratnapura and Kegalle districts are the worst ever experienced in those areas.

## DO YOU KNOW?

The total extent of wild life reserves in Sri Lanka is about 2500 sq. miles and constitute only about 10 percent of the total land area. Fifty years ago there were 40,000 tigers but today there are only less than 2500. There are about 85 species of mammals 400 species of birds and less than 1500 wild elephants. Wildlife is endangered all over the earth—300 species of mammals, 400 species of birds, 200 species of reptiles and amphibians, and 100 species of fish of the more than 1·5 million species of insects on our planet most play important roles in ecosystems. About 20 percent are directly useful to man, while only 2 percent are directly harmful.

More than 60,000 of the world's 265,000 plant species are at risk of extinction. Some 20 of the more than 20,000 known edible plants dominate world food supply - a dangerous dependance on a handful of crops.

## 'A' level papers.

The present structure and pattern of many of the G. C. E. A level question papers will be changed we learn from next August. Candidates will be offered more options in their choice of questions.

The commissioner has said there will be no change in the format of Paper One in Physics, Chemistry, Zoology and Botany, while part A of Paper Two will also remain the same.

In Part B of Paper Three candidates will have a wider choice - the option of selecting four out of eight questions against the previous four out of six.

In most other subjects Science Arts and Commerce too there will be more questions giving candidates a wider choice. The number of questions they must answer will remain as at present.

## Twenty — Five Years OF TEACHING SERVICE.

A Service to thank God for twenty — five years of Service to
JAFFNA COLLEGE
by
**MR. S. BALACHANDRAN** B. Sc. (Cey.) Dip. Ed.
*WILL BE HELD ON WEDNESDAY THE 12TH JULY AT 8-45 a. m.*
IN THE CATHEDRAL CHURCH, VADDUKODDAI.
**Friends, Old Students and wellwishers are Cordially invited.**

*S. Jebanesan.*
Principal.

## Fifty Years Service.

Mr. R. A. S. Paul (Retired Sub-Manager Bank of Ceylon) completed fifty years service with the Y. M. C. A. movement in Sri Lanka. From the year 1938, while a student, he took an active part in the 'Y' work. He was for sometime Hony. Secretary of the Navaly YMCA.

In 1985, he received an Award for long standing membership with the Colombo Y. M. C. A. He is now one of its most senior members. He is a son of the late Mr. and Mrs. A. R. Paul of Manipay.

*Gratefully Remembered:*

## Prof. Hilary Crusz.

We are sorry to record the death of Prof. Hilary Crusz, Emeritus Professor of Zoology at the Peradeniya University, who was one of the last batch of students to graduate with honours from the London University as a student of the University College, Colombo at Thurston Road. He obtained his Doctorate in 1948. He was made Professor in 1964, at the age of 44. He was a christian and never found any reason for conflict between Science and his religious beliefs.

At the request of the Archbishop of Colombo, he brought out a book "Creation and Evolution. The Foreword for this book was written by Dr Cyril Ponnamperuma. His interests were not confined to his main discipline. *Zoology - English Literature* and *Music* were some of his other pursuits which made him a much loved and revered mentor among those who were privileged to be his students. He was a distinguished Product of St. Peter's College, Colombo.

## In Memoriam.

**JEYARAJAHS**

*For Blessings of our wonderful parents,*
*The love and joys of VALENTINE,*
*Accept our deepest heartfelt thanks—*
*We are so grateful Lord.*
**Affectionately remembered by their loved ones.**
10, Church Road,
Chavakachcheri.

**WITH EVERGREEN MEMORIES OF OUR BELOVED**



(Emma)
**EMILY GNANARATNAM SATHASEEVAN.**
**Born: 20-06-1917**
**Died: 08-01-1988**
**Deeply cherished and fondly loved by**
**SAM, LIZZIE and MEENA**
*'Where The Lord Guides — The Lord Provides'*

*Short Story.*

## THE DOCTOR.

Six long years of anguish and waiting was coming to an end—Vijayan would be returning in a couple of weeks time. What a re-union it would be for Raji to meet Vijayan. But then, would he return single or would he bring a white woman. "Would he be single or would he be' married, but he cannot" —these were the thoughts that were haunting the mind of Raji.

It was at the College social that they had, first met. Shy Raji just out of a convent was attending her first social in the midst of boys. Beautifully dressed is a green Daka saree and choli-blouse she came, and be it accident or otherwise, seated by her side was jovial Vijayan. The social went on, and but for the replies she gave Vijayan to his anxious questions she hardly spoke. Vijayan had tried his best to make her move free, but had failed miserably. Then midst loud cheers it was announced that Raji would give a performanee of Baratha Natyam. Gracefully she mounted the stage and gave a brilliant performance of a dance swaying her shapely body to the rhythm of the Baratha Natyam. She ended her performance and walked shyly back to her seat mids't thunderous shouts of applause. Vijayan was the first to congratulate her, and soon they were in conversation discussing, this, that and the Other. They met quite frequently during College sessions, and within a short time an affair had begun. What queer things Dan Cupid could do in weaving the pattern of love.

Things did not turn out quite smoothly for these young lovers, for when the results of the Medical Entrance results were published, Vijayan's name was missing. His three attempts at the entrance had ended, and his only hope of being a doctor was to go abroad, but where was he to find the money? Yes, Raji was the only hope.

Vijayan forced her out of school into the teaching profession much against her father's wish, but being his only child, with no mother, who had passed away when Raji was a baby, he gave in.

Vijayan soon sailed for England and began his medical career, supported by Raji and the little he could get from his uncle. They lived in separation with the postman helping them in every way he could. But again disaster befell Raji, for her father was killed in a motor accident. Left an orphan, she entered the boarding of the school in which she was teaching. But here the teachers found pleasure in teasing her about young men who went to England and returned with English wives. During the holidays she went to her aunt's expecting relief from her annoying fellow teachers, but here too, her aged aunt was no better, for she too kept on saying about this boy and that boy returning with an English woman.

The sixth year of Vijayan's stay in England was ending and his final examination was to be held soon. Working for his examination or otherwise he could not write to Raji for ome time; and this in addition to the impact of the stories Raji heard, began to tell on her mind. Will Vijayan return with an English wife?

A letter arrived from Vijayan informing Raji of his success and his departure to Ceylon. But yet she doubted him. Could she see Vijayan with an English wife? Could she face the world? But will he ....? Yes it was a nightmare working in her mind all the time.

Vijayan arrived in Colombo single with absolutely no attachments. He looked for Raji, but he could not find her. That night he entrained for Jaffna and on arrival at the Jaffna Station, he hired a taxi, and still in his train-soiled dress he arrived at the school in which Raji taught, only to be met by a set of women with gloomy faces.

When he asked for Raji, one of the ladies led him to Raji's room. Lying on the bed was Raji. He rushed in, and on feeling the body found it cold and stiff. Oh the side table was a bottle labelled "Poison Acetic Acid" and be neath the bottle a letter addressed to Vijayan. He read the letter. "I cannot bear to see you with another woman. Before anything of the kind happens it's best I end my life. Yours Raji."

Yes. Idle gossip had killed another woman!

* * * * *

## Dr. Jebanesan, Alumni, Ladies and Gentlemen:

One of my favorite poems has been Lord Tennyson's "In Memoriam.' particularly the lines "the old order changeth, yielding place to the new and God fulfills himself in many ways." So be it with men and with institutions. These lines of Tennyson have an even deeper meaning for us Tamils today because the very foundations of our society is being rocked and challenged from within. There was a time when there were pillars and guideposts that appeared to be changeless and timeless, but not anymore. However, in the midst of all this doubt and fear, there is one institution that has nurtured the Tamil man and the Tamil woman, given them direction and purpose, the crown jewel of our lives - our schools, particularly one school, Jaffna College. A school that owes its origins to the North American continent.

Principal Jebanesan, we welcome you tonight as the fulfillment of a changing order that connects us to the past 153 years and will bind us to the new century that will dawn in another 11years. You are relatively young and, therefore, can take our children into this new century which we hope will be kinder than the old.

Justice H. W. Thambiah one told me, "Champion, you Jaffna college fellows always stant out in any company because you are not afraid to speak your mind. This spirit of independence and democracy has been the result of the American tradition of freedom of speech and thought. The art of public speaking we perfected in the school, and the elective principle was applied to all student positions. From the school council to the sports captains—all were elected. Occasionally we were stuck with a nitwit here and there but on the whole it worked for better student government. Democracy is not about important people in important places; democracy is about common people given the opportunity and the freedom to be important.

It is said that Kwame Nkrumah, the former President of Ghana, was returning after finishing his Masters at Linclon University in Pennsylvania. As his ship was leaving New York harbour and passing the Statue of Liberty, he raised his hand and said, "I will carry your message of liberty to my people."

In a real sense Jaffna College has been the institution that nurtured the independent movements of the 20's and the 30's. The teachers were in the best sense of the phrase, "disturbers of the peace." Handy Perinpanayagam's name will always be remebered as a man who put his ideals before profit. He was a great inspiration to generations of students.

When Dr. Jebanesan was appointed Principal, I wrote him a letter about the incident between one of the teachers and the Rev. Bicknell. I am told for years, the Rev. Becknell objected to the holiday granted to Jaffna College students and staff during the annual C. S. I. Synod. One year, the Rev. Bicknell was elected chairman of the Synod. At a staff meeting, the teacher asked him, "Now that you are the chairman and have the power why don't you cancel the holiday?" The Rev. Bicknell replied it is one thing to possess power, it is altogether a different thing to use it."

Principal Jebanesan, I am sure you will use your powers wisely. I have known your parents, your brothers and your sister, many of whom I taught. It is most fitting that a man of your scholarship and your close connections to Jaffna College should lead this institution at this time. I convey to you my personal congratulations and that of all of us here tonight.

I also want to take this opportunity to thank those such as yourself who have remained in Jaffna and helped our people in their hour of distress. You courage and commitment must remain immeasurable. Many of you were there when Jaffna College was taken over by the government and lived to see it being returned. It was returned because it was a transaction tainted by guilt. A guilt that would not wash away. Talking of takeovers, I am reminded of the sad, humorous, but true story of Bishop Lakdasa De Mel and the Bandaranaike government.

In the *1960*'s, the government of Sri Lanka had to redeem an election pledge which was to declare by law certain areas of Anuadhapura "the sacred city." Unfortunately, the Anglican Cathedral fell within the boundaries of the sacred city. The government negotiated to pay for the building of a new cathedral. Finally, after months of protracted talk, the local minister reported to Bishop De Mel. He said, "My Lord, the government will give us a million rupees in cash and the rest in gilt edged securities." The Bishop smiled and asked him, "Pray tell me how do they spell that word 'guilt'?"

When I was leaving Jaffna College in 1966, I went to the Rev. Bunker's office to wish him goodbye. We started talking and the conversation turned to the future of Jaffna College and the constant threat of a takeover. At one point I was quite surprised when he leaned over and said, "You know Champion, if the government of Sri Lanka enters into a serious dialogue with us about the possibilities of a University in the North and Jaffna College is chosen for that purpose, I will have no qualms about the future of the institution." He said he was opposed to a mere physical takeover because then it would be a hollow shell. One hundred fifty years of history must go with the institution if it was to go at all. Finally, his worst fears were realized. They took the buildings and he was mercifully spared the witnessing of the very painful event. The tragedy is that by *1974* no dialogue was possible.

I have always resisted the temptation to tell people what they should or should not be doing. When I visited Sri Lanka in 1982, Dr. N. T. Sampanthan formerly of Moolai Hospital asked me, "Champion, what advice do you have for us Tamils?" I told him, "Doctor I have no right to be giving you advice. I have taken my family and left. The day I decide to come back or at least send my children back, then I will exercise my right to tell you what should or should not be doing." Far too many of us in the comfort of our homes and our jobs, having seen to

( continued on page 7 )

# உதய தாரகை

UTHAYATHARAKAI

Estd. 1841.

கிறிஸ்தவ வார இதழ். வெள்ளிதோறும் வெளிவருவது:

நீதி ஜனத்தை உயர்த்தும்: பாவம் எந்தக்குலத்துக்கும் இழிவாம்.

மலர் 149 30, 07 - 07 - 1989 [இதழ் 26 & 27


## செய்திகள்:

### இல்லப்போட்டி.

"சைக்கிள் அம்மா" என்று முரசு மோட்டை மக்களால் அன்புடன் அழைக்கப்பட்ட காலம் சென்ற சகோதரி பேக்கர் அம்மா அவர்களின் ஞாபகார்த்த தினமாகிய ஆடிமாதம் 1 ம் திகதி சனிக்கிழமை நவஜீவனத்தில் மிகவும் அமைதியான முறையில் பொறுப்பாளர் கிருபா தம்பிராஜா அவர்களின் தலைமையில் இல்லப்போட்டிகள் நடைபெற்றன. இதில் பெரும் திரளான பொதுமக்கள் கலந்து கொண்டது குறிப்பிடத்தக்கது.

### திருமணம்.

தேவராஜா



கிறிஸ்ரிஞ.

தேவராஜா பாக்கியநாதன் அவர்களுக்கும் சங்கானையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் காரைநகர் திருச்சபையின் உறுப்பினருமாகிய செல்வி கிறிஸ்ரிஞ விஜயலக்ஷ்மி செல்லையா அவர்களுக்கும் விவாக ஆராதனை யூன் மாதம் 10ம் திகதி சனிக்கிழமை (10 - 06 - 89) காலை 10-00 மணிக்கு, காரைநகர் தென் இந்திய திருச்சபையில் நடைபெற்றது.தெ. இ. திருச்சபையின் பேராயர் அதி வண. டி. ஜே. அம்பலவாணர் அவர்கள் திருமணத்தை நடத்திஞர். சபைக்குரு வண. ஏ. வி. யேசுதாசன், வண.டி. எஸ். தியாகராஜா ஆகியோர் இவ் ஆராதனையில் உதவி புரிந்தார்கள். திருமணத்தின் பின்பு கா. தெ. இ. திருச்சபை வளாகத்தில் விருந்து உபசாரம் நடைபெற்றது.

### ஓர் எச்சரிக்கை.

யாழ். குடாநாட்டில் நூறு ரூபாவுக்கான போலி முத்திரைகள் புழக்கத்துக்கு வந்திருக்கின்றன. என அறிகிறோம். உண்மையான நூறு ரூபா முத்திரை கருமை நிறத்தைப் பின்னணியாகக் கொண்டது. தடிப்பாகவும் இருக்கிறது. போலி முத்திரையில் அந்த நிறம் மங்கலாகவே தெரிகிறது. மெல்லியதாக உளது. இதனைத் தபால் பகுதி வட்டாரங்கள் தெரிவித்தன. சுன்னுகம் தபாற்கந்தோரில் மட்டும் மூன்று போலி முத்திரைகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன எனத் தெரிகிறது.

### பூமியின் வெப்பம் அதிகரிக்கிறது.

உலகின் கால நிலையில் தற்போது ஏற்பட்டு வரும் மாற்றம், பெரும் அழிவைக் கொண்டுவரப்போவதாக ஐ. நா. சுற்றுப்புறப் பாதுகாப்பு அமைப்பின் தலைவர் டாக்டர் முஸ்தா றூல்பா எச்சரிக்கை விடுத்துள்ளார். பூமியின் வெப்பம் அதிகரித்து வருவதால், நைல் நதிப்பகுதியில் இதன் தாக்கம் அதிகமாக உள்ளது,

கடல் நீர் மட்டம் உயரும் ஆபத்து ஏற்பட்டுள்ளது.

### தெய்வீக மூலிகைகள்.

கடந்த மாதம் சென்னையில் நடைபெற்ற, 'இயற்கை மருத்துவப் பயிற்சி முகாமின் "நிறைவு விழாவில், உரையாற்றிய டாக்டர். சி. கே. மாணிக்கவாசகம் "இயற்கை மருத்துவத்தின் மூலம் கடுமையான நோய்களை எளிதாகப் போக்கிக்கொள்வதுடன், வாழ்நாள் முழுவதும் நோய் நொடியில்லாமல் வாழ முடியும்" என்றும் கூறிஞர். காட்டில் இயற்கையாக வாழும் மிருகங்கள் நோயின்றி வாழ்வதைப் போல், அன்று மனிதன் நோயின்றி வாழ்ந்தான். இயற்கை மருத்துவத்தில், அனல் சிகிச்சையும் ஒன்று. இந்தச் சிகிச்சை மூலம் ஒருவன், 20 ஆண்டு குறைந்தது போன்ற இளமையைப் பெறலாமெனத் தெரிகிறது.


### பாமாலை இசைநாடா.

சுண்டுக்குளி மகளிர் கல்லூரியின் கிறிஸ்தவ பாடகர் குழுவினர் "உயிர்த்தெழுந்த தேவகுமாரனுக்கு பாமாலையால் ஒரு பூமாலை" என்ற தலைப்பிலான பன்னிரண்டு பாடல்களைக் கொண்ட இசைநாடாவொன்றைத் தயாரித்து வெளியிட்டுள்ளனர்.

இந்த இசைநாடாவிலுள்ள பத்துப் பாடல்களை திருமதி. சந்திரா- பத்மபாலன் அவர்கள் இயற்றிஞர்கள். இப் பாடல்களுக்கான இசை அமைப்புக்களை திரு. எம். கண்ணனும், திருமதி. சந்திரா பத்மபாலனும் செய்துள்ளார்கள். இப் பாடல்களை அமைப்பாளருடன் இணைந்து செல்விகளான மாலதி கனகராசா றூபி ஜீவானந்தம், நிசாந்தி கருணராசா, மீரா சாம்பசிவம் ஆகியோர் பாடியுள்ளார்கள்.

இப் பாடலுக்கான பின்னனி இசையில் வயலின் வாத்தியத்தை செல்வி. றீட்டா செல்லையாவும், திருமதி. சுமதி ஜீவானந்தமும், வீணை வாத்தியத்தை செல்வி வனிதா பிரான்சிஸ்சும், செல்வி லொறின்டா சிறீரங்கநாதனும், தபேலா வாத்தியத்தை திரு. பி. வரதனும், கிற்றார் வாத்தியத்தை திரு. ஆர். வாசனும் வாசித்துள்ளார்கள்.

### மரணம்.



அருள்திரு. மார்க்கண்டு தேவதாசன்

ஏழாலை வடக்கு, தெற்குச் சபைகளின் குருவான, வண. மா. தேவதாசன் ஜூன் மாதம் 25ஆம் திகதி காலமாஞர். இவர், சொர்ணத்தின் அன்புக்கணவரும். வவுனியாவைச் சேர்ந்த திரு. மார்க்கண்டு தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வரும் ஆதவன், ரூபன் ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதி ஆராதனை, காலை 7-30 மணியளவில், ஏழாலை வடக்குக் குருமனையில் வண. சேவக்சாம் அல்பிரட் தலைமையில் நடத்தப்பட்டது. வண. டி. ஆர். அம்பலவாணர் ஜெபம் செய்தார். திரு. பி. குணரத்தினம் ஏழாலை தெற்குச் சபையின் சார்பிலும், திரு. அருள் பிரகாசம் ஏழாலை வடக்குச் சபையின் சார்பிலும் இரங்கலுரை வழங்கிஞர்கள். வண. அல்பிரட் அவர்களின் செபத்துடனும் ஆசீர்வாதத்துடனும் கூட்டம் முடிவுற்றது. போதகரின் பூதவுடலைத் தாங்கிய பேழை, குரு இல்லத்திலிருந்து ஏழாலை வடக்கு ஆலயத்தில், பயபக்தியுடன் வைக்கப்பட்டது. ஆலயத்தில், யாழ்-பேராயத்தின் பேராயர் அருள்மிகு டி. ஜே. அம்பலவாணர் அவர்களின் தலைமையில் இறுதியாராதனை, வண. ஏ. ஜெயக்குமார், வண. டி. தியாகராஜா, ஆகியோரின் உதவியுடன் நடைபெற்றது. வண.வி. என். தர்மகுலசிங்கம், காலமான தேவதாசன் போதகரைப் பற்றி இரங்கலுரை வழங்கிஞர். பேராயர் அம்பலவாணர் அவர்கள். யோபு 1; 21 ஆம் வசனத்தில் அருளுரை ஆற்றிஞர்.

ஏழாலைச் சபைகளின் பாடகர் குழுக்கள் சிறப்புப் பாடல்களைப் பாடினர். ஆராதனையின் பின், பூதவுடல் இவரின் பிறப்பிடமாகிய வவுனியாவுக்கு எடுத்துச் செல்லப்பட்டு, அங்கு நல்லடக்க ஆராதனை 28 - 6 -89 புதன்கிழமை காலை 8- 00 மணிக்கு, அன்னரின் இல்லத்திலும் பின்,வவுனியாச்சபையின் கல்லறைத் தோட்டத்திலும் சபைப் போதகர் வண. நவீந்திரனுகூலன், வண. டி. எஸ். தியாகராஜா, ஆகியோரால் நடத்தப்பட்டது. இவரின் பிரிவால் துயருறும் இவரின் தந்தை, மனைவி திருமதி சொர்ணம் தேவதாசன்,பிள்ளைகள், சகோதர சகோதரிகள் ஆகியோருக்கு எங்கள் அகங்கனிந்த அனுதாபங்களைத் தெரிவிக்கிறோம்,

"கர்த்தருடைய பரிசுத்தவான்களின் மரணம் அவர் பார்வைக்கு அருமையானது"

(சங். 116: 15

### 50வது வருடாந்தக் கூட்டம்.

யாழ்ப்பாணத்திருச்சபை நற்செய்திக் கழகத்தின் 50வது வருடாந்தக் கூட்டம் நல்லூர் பரியாக் கோபு ஆலயத்தில் நடைபெற்ற நன்றி தெரிவிக்கும் ஆராதனையுடன் ஆரம்பமாகியது. ஆராதனையில் யாழ்ப்பாண அர்ச் டீக்கன் அருட் கலாநிதி டொனல்ட் கனகரத்தினம் அடிகளார் அருளுரை நிகழ்த்திஞர்கள். அர்ச்டீக்கனுடன் இணைந்து அருட்திரு யே. சர்வானந்தன் அடிகளாரும், அருட்திரு. ஐசக் செல்வரத்தினம் அடிகளாரும், அருட்திரு ஜெயராசா அடிகளாரும் ஒப்புக் கொடுத்தார்கள்.

ஆராதனையைத் தொடர்ந்து நடைபெற்ற வருடாந்தக் கூட்டத்தில் புதிய வருட நிர்வாகிகள் தெரிவில் தலைவராக, யாழ்ப்பாண அர்ச் டீக்கன் அருட் கலாநிதி டொனல்ட் கனகரத்தினம் அடிகளாரும், உப தலைவராக, கலாநிதி ஈ. எஸ். தேவசகாயமும், பொதுச் செயலாளராக திரு. எஸ். பி. ஜீவானந்தமும், பொருளாளராக திரு. எச். ஜே. ஞானபொன்ராசாவும், கணக்காளராக திரு. பி. எஸ்அருள்ராஜாவும் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

### டானியேல் பூவரது 200வது பிறந்ததினவிழாக்கருத்தரங்கு.

டாக்டர் டானியேல் பூவரது இருநூருவது பிறந்த தினவிழாவையொட்டி, ஜூன் மாதம் 24 — 26 ஆம் திகதி வரை யாழ். கல்லூரி ஒட்லி மண்டபத்தில் அருட்தொண்டும் அருட் செய்திப்பணியும் இன்றும் 21 ஆம் நூற்ருண்டிலும்" என்ற பொருளில் நடைபெற்றது.

இக்கருத்தரங்கைப் பின்வருவோர் நடத்திஞர். தமிழ் நாடு இறையியல் கல்லூரித் துணை முதல்வர், அருட்திரு டாக்டர் தயான்சந் கார் மூன்று வேதப் படிப்புகளை - முதல் மூன்று அருட் செய்தி நூல்களைப் பொருளாக வைத்துச் சிறப்பாக அனைவரின் மனங்களையும் கவரத் தக்க முறையில் நடத்திஞர். அனைத்துலகச் சபையியக்க மன்றத்தின் தலைவர்களில் ஒருவராகிய டாக்டர் பிறேமன் நயில்ஸின்,இரண்டு சொற்பொழிவுகளும், தென் கொரிய இறையியல் கல்லூரியில் பேராசிரியராகப்பணியாற்றும் பேராசிரியர் கே. கிம் அவர்களின் ஒரு சொற்பொழிவும், யாழ். கத்தோலிக்க இறையியல் கல்லூரி முதல்வர்அருள் பிதா - எஸ். ஜே. இம்மானுவேல் அவர்களின் சொற்பொழிவும் இடம் பெற்றன.

### அருட்திரு. டாக்டர் டானியேல் பூவர் பிறந்த 200வது ஆண்டு நிறைவு விழா

அமெரிக்க நாட்டிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு 1816ஆம் ஆண்டில் வந்த முதல் மிஷனரிமாரில் முதல்வராகிய டாக்டர் டானியேல் பூவர் அவர்கள் பிறந்த இருநூருவது ஆண்டு நிறைவு விழாக் கூட்டங்கள் ஜூன் மாதம் 27ம் திகதி வட்டுக்கோட்டையில் சிறப்பாக நடைபெற்றன. அவற்றின் விவரம் வருமாறு:

### ஆலயப் பிரதிஷ்டை வழிபாடு:

வட்டுக்கோட்டைப் பேராலயம் நீளமாக்கப்பட்டு. அதற்கு ஒருபுதிய ஆடையறையும் கட்டப்பட்டது. இப்பேராலயத்தில் பிரதிஷ்டை வழிபாட்டு விழா யூன் மாதம் 27ம் திகதி காலை 8.00 மணிக்கு, வண. டாக்டர் டானியேல் பூவர் அவர்களின் 200வது பிறந்தநாள் தினத்தன்று மிகவும் அடக்கமாக வெகு விமர்சனையாகக்கொண்டாடப்பட்டது. இவ் ஆராதனை, யாழ். தென் இந்தியத் திருச்சபையின் பேராயர் வண. அருள்மிகு டி. யே. அம்பலவாணர் அவர்களால் நடாத்தப்பட்டது. இப் பேராலயப் பிரதிஷ்டை வழிபாட்டு ஆராதனைக்குப் பேராயத்தின் குருமார்கள். மற்றும் திருச்சபைக் குருமார்கள் திருச்சபைகளின் அங்கத்தவர்கள் பங்குகொண்டார்கள். பேராலயம், என்றும் இல்லாதவாறு மின் விளக்குகளிஞல் அலங்கரிக்கப்பட்டதுடன் வீதிகளையும் மின் விளக்கிட்டு அலங்கரித்தமை குறிப்பிடத்தக்க ஒன்ருகும்.

### நன்றி செலுத்தும் நற்கருணை வழிபாடு.

இதன்பின். டாக்டர் பூவரது வாழ்வுக்காகவும், அவர் செய்த நற்பணிகளுக்காகவும் நன்றி செலுத்தும் நற்கருணை வழிபாடு பேராயர் அருள்மிகு டி. ஜே. அம்பலவாணர் அவர்கள் தலைமையில் காலை 8.15 மணியளவில், பேராலயத்தில் நடைபெற்றது. இவ் வழிபாட்டில் வண. ரி. எஸ். பிரேமராசா. வண. எஸ் ஜெயநேசன், வண. வி. என் தர்மகுலசிங்கம், வண. எ. ஏ. ஜெயக்குமார் ஆகியோர் பேராயருக்கு உதவி செய்தனர். திரு. டபிள்யூ. டி. குலத்துங்கம், செல்வி. சி. வி. செல்லையா, அருட்திரு. சி. ஜே. றொபேர்ட்ஸ், ஆகியோர் திருமறைப் பாடங்களை வாசித்தனர். பேராயர் அம்பலவாணர் அவர்கள் அருளுரை வழங்கிஞர்.

## சிந்தனை 22.

ரூத் 4: 1 — 11

### வானம் பாடிகளாய்க் கானம்பாட......

வாழ்வு என்பது போராட்டம் நிறைந்த ஒரு இடமே யல்லாமல் சமாதானமான ஒன்று அல்ல. போராட்ட வாழ்வில் புனிதமான கருத்தறிந்து, பயங்கள் நிறைந்த காலத்தில் பயம் நீக்கி அழுகையும் கண்ணீரும் நிறைந்த காலங்களில்

"காப்பார் காப்பார் கர்த்தர் காப்பார் கலங்காதே மனமே காத்திடுவார்" என்று பாடிக்கொண்டு வாழும் வாழ்வே ஜீவ வாழ்வு. இத்தகைய உணர்வுகளுடன் செயல்பட்டுக் கொண்டிருக்கும் சபையாகிய, செயலாற்றும் கிறிஸ்துவுடன் இணைந்தும் அணைந்தும் செயல்பட அழைக்கப்பட்டவர்கள் நாம் என்று அனைவரும் உணர்ந்து செயற்படுவதே சிறப்பானது. இறைமகன் இயேசு கிறிஸ்துவின் செயலாற்றல், மக்களுக்கூடாக மக்களுக்காக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது.

தன் மக்களை-தன் நாட்டைமறந்து தனது கலாச்சாரம் பண்பாடு ஆகியவற்றை மறந்து, மாமி நகோமியைப் பின் தொடர்ந்த ரூத்து வாழ்வுக்காகத் துடித்தது உண்மை. இல்லற வாழ்வு இவளுக்குக் கிடைக்க வேண்டும் என்று நகோமி செயல்பட்டதும் உண்மை. இவ் இருவரினதும் உள்ளத்து உணர்வு அலைகளை அறிந்த இறைத் திட்டம், போவாசுடைய நல்ல உள்ளத்துக்கூடாகச் செயல்பட்டது என்று கூறுவதே சிறப்பு. போவாசுடைய மனநிறைவான செயற்பாடு, போவாசுக்கு ஆசீர்வாதமாக மாற்றப்பட்டது.

உலகியல் வாழ்வில் இருக்கவேண்டிய அருட் செல்வமும் பொருட் செல்வமும் குறைவற்று இவனிடம் இருந்தது. பொருள் நிறைந்து புவி மீது சிறப்புப் பெற்று இருந்த போதும், பொருட் செல்வம் இல்லாத ரூத்துவுக்குப் புது வாழ்வுதர முந்திக்கொண்டான்.

எவ்வளவு இருப்பவர்களாக இருந்தாலும் இல்லாதவர்க்குதவும் விருப்பமுடையோர் இல்லாதவர்க்கு உதவுவதில் விருப்பமில்லாதிருப்பது ஏன்? அருட் செல்வம் அருகிக் கொண்டு செல்லுவதே இதற்குக் காரணம்.

திருமண விடயத்திற்கூட எல்லாம் நிறைவாக இருப்பவர்கள் இல்லாதவர்களிடம் கல்லிலே நார் உரிக்க முற்படுவதுபோலப் பிடுங்க நினைப்பது சரியென வாதாடும் மக்களும் இருக்கின்றார்கள். இவர்கள் சிந்தை எப்போது மாறும்? பதில் கிடைப்பதற்கு, மக்கள் இறைவனின் அருளாட்சிக்குள் வரவேண்டும்.

போவாசுடைய அருட் செல்வம் ரூத்துடைய அருட் செல்வத்துடன் இணைந்ததே அன்று. அவளிடம் இல்லாத பொருட் செல்வத்தை, போவாஸ் தேடிப்பார்த்திருந்தால் நல்லதொரு விசுவாசியை அன்று ஒதுக்கியிருப்பான். ஆனால் போவாஸ் நல்லதொரு விசுவாசியையே தன்துணையாக அன்று கண்டான். அவளிடம் இருந்த தூய்மையான அன்பைக் கண்டான் - தியாகம் நிறைந்த சேவையைக் கண்டான். ரூத்துவுக்கு உதவி தரத் தன் இதய வாசலைத் திறந்து வைத்தான். திறந்த வாசலுக்கூடாக வருக வருக என்று ரூத்தை வரவேற்று, இல்லறத்தை இறை அருள் நிறைந்த நல்லறமாக்கும் இல்லத் தலைவியாக ஏற்றுக் கொண்டான். இச் செயற்பாடு, பட்டமரம் என்று உணர்ந்த நகோமிக்கும், மாமிக்குச் சேவை செய்து வாழுவதே தன் வாழ்வு, ஆகவே இறுதிவரை யூத விசுவாசியாகவே இருப்பேன், என்று வாழ்ந்த இலட்சியப் பெண்ணான ரூத்துவுக்கும், அன்னிய நாட்டுப் பெண்ணானாலும் யூத நாட்டின் இறைப்பற்றுறுதியைப் பற்றுக் கொண்ட இவளைக் கரம் பற்றி வாழுவதே சிறப்பியல்பு என்ற போவாசுக்கும் புதுவாழ்வு தந்தது.

நம்முடைய செல்வங்களும் செல்வாக்குகளும் எத்தனை பேருக்கு வாழ்வு தந்தன. வாழத் துடிப்பவர்களுக்கும் வாழும் வழி அற்றவர்கட்கும் உதவும் தகுதி நம்முடைய செல்வங்களுக்கு உண்டா? வாழ்வுக்காய்த் துடிக்கும் இதயத் துடிப்புக்களைச் சந்திக்கவேண்டும் — இக்கருத்தோட்டத்தைச் சிந்திக்கவேண்டும். சிந்தனை விரிவடையும்போது, புதிய வானமும் புதிய பூமியும் தெரியும்: இகழ்ச்சிகள் அகலும், இதயங்களில் உதயகீதம் ஒலிக்கும்.

தினைபோல் நிறைந்த துன்பம்
பனைபோல் நிமிர்ந்து வளரும்
போது—இறை
நினைவு மலரட்டும் நேர்வழி
தெரியட்டும்
மனையில் மங்கியதிரி அனையார்
— மா
வினைகள் பெருகினும் மறவார்
உன்னை — இறைவன்
வனைவார் புதிதாய் வாழ்வும்
தருவார்
சேனைகளின் இறைவன்
முன் செல்வார் — நம்பு
தேனைச் சொரிபவர் ஊனை
உருக்கியவர் — இன்று
கானம்பாடி மகிழ அழைக்கிறார்
— நாம்
வானம் பாடிகளாய்ப்
பறப்போம் வாரீர்.

துறையூரான்.
வண. ஆ. வே. யேசுதாசன்.

~~~~~~~~~~~~

## கலித்தொகையில் ஒரு காதற்காட்சி.

(இன்று நாகரிகம் அடைந்தவர்களெனத் தமிழனால் குருட்டுத்தனமாய்ப் பின்பற்றப்படுபவர்கள் காட்டுமிராண்டிகளாக வாழ்ந்த காலத்தில் தமிழன் சீரும் சிறப்புமுற்றுப் பண்புடையவனாய் வாழ்ந்த காலம் சங்க காலமாகும். இன்று நாகரிக முள்ளவரெனக் கருதப்படுபவர்களால் பின்பற்றப்படுவதும், ஆனால் தமிழனால் போற்றப்படாததுமாகிய காதல் அக்காலத்தில் மக்களாலும் புலவராலும் கையாளப்பட்டுக் கண்ணெனப் போற்றப்பட்டது. அக்காலத்தில் அதிகமாக எழுந்த இலக்கியம் காதலைப்பற்றிக்கூறும் "அகம்" என்னும் பிரிவின்பாற்பட்டது. அவற்றுள் ஒன்றே கலித்தொகையெனும் அமுதக் குவியல். இங்கு கீழே காணப்படும் சொல்லோவியம் அவ்வமிழ்தக் குவியலிலே ஒரு துளியாகும்.)

உயர்ந்த மலைகள்; 'ஓ' வென்று விழும் அருவிகள்; வளர்ந்த கமுகுகள்; வானை முட்டும் விருட்சங்கள்; வளைந்து ஓடும் சிற்றாறுகள்; வளமான தினைப்புனங்கள்; பழுத்து வெடித்த பலாப்பழங்கள்; அவற்றைப் பகிர்ந்துண்ணும் வானரங்கள்... இப்படி அழகே உருவான ஒரு குறிஞ்சி நிலம். அங்கு ஒரு குறிப்பிட்ட தினைப்புனம். அதன் நடுவில் ஒரு பரண், அதன் மேலே ஒரு பெண். வயது பதினாறிருக்கும்; வளமான உடற்கட்டு! அவளைப்பற்றி அதிகம் வளர்ப்பானேன்! இரண்டே வார்த்தைகள் 'கொள்ளை அழகி'.

காலை பத்து மணியிருக்கும்: பாவை பரண் மேலேயே நின்றிருந்தாள். பறவைகள் வந்தன. தினைக் கதிர் உண்டன. அவற்றை விரட்ட அவள் எண்ணவில்லை. பழக்கப்பட்டு விட்டதனால் அவளுடைய அல்லித்தண்டு போன்ற கைகள் மட்டும் ஏதோ சிறிது அசைந்து அவைகளை விரட்ட எத்தனித்தன. ஆனால் வெற்றி பெறவில்லை.

வெய்யில் ஏறிக் கொண்டேயிருந்தது: வேல் விழியாளுக்கு வெப்பம் தெரியவில்லை! ஏன் தான் இந்த வுலகத்தில் இருப்பதாகவே அவளுக்குத் தெரியவில்லையே!

விரிந்த தாமரைபோன்ற முகத்தில் வியர்வைத்துளிகள் மிளிர்ந்தன. முத்துப்போல ஒளிவிட்டன. முத்துப்போல ஏனோ அவள் வதனம் வாடியிருந்தது. களைந்தெறியப்பட்ட கமலம் போன்று தென்பட்டாள். இன்று மட்டுந்தானா இப்படி? இல்லையே! நான்கைந்து நாட்களாக இப்படித்தான். இனிய முகத்தில் இருள் படிந்து கிடந்தது.

கருமுகிலொன்று கதிரவனை மறைத்தது: காரிகையின் உள்ளத்திலும் எண்ணங்கள் சுழன்றன. கடந்த நிகழ்ச்சிகளெல்லாம் ஒன்றன் பின் ஒன்றாக அவள்மனத்திரையில் ஓடின. நடந்து நான்கு நாட்கள் தான் ஆகியிருந்தன. ஆனால் நாற்பது ஆண்டுகள் கடந்து விட்டது போன்ற உணர்ச்சி அவளுக்கு. அந்த நிகழ்ச்சியை நினைத்துக் கொண்டாள்; மகிழ்ச்சியால் அவள் உடல் பூரித்தது. முகத்திலே ஒரு ஒளிர்வு.

இன்றுபோலத்தான் அன்றும் தினைப்புனம் காத்து நின்றாள் அவள். திடீரென்று எதிரே வந்து நின்றான் அவன். திரு நிறைந்த மேனியன்; திரண்ட தோளினன்; தலைமாலை அணிந்திருந்தான். தனுவொன்று கையில் இருந்தது, கணைக் கூடு தோளில் தொங்கிற்று. விலங்கு துரத்தி வந்த அவன், அவள் விழியால் அடிபட்டு நின்றான். வியப்பு நீங்கிப் பார்த்தான்; பாவை தலை குனிந்து கொண்டாள். சிவந்த அவள் முகத்தில் மேலும் செம்மை படர்ந்தது; வாலிபன் ஏதோ சொல்ல வாயெடுத்தான்; ஆனால் வார்த்தைகள் வெளிவரவில்லை. வள்ளுவர் குறள் வாழ்க்கையில் நடந்தது! சிறிது நேரம் பார்த்து நின்றான் பின் வந்த வழியே திரும்பிச் சென்றான்

போகவிட்டுப் புறம்பார்த்தாள் பாவை; அவள் உள்ளத்தையுமல்லவா அவன் கொண்டு சென்று விட்டான். கன்னி கவலை கொண்டாள்; காரிருள் வந்தது. கண்ணுறங்கவில்லை அவள்; மறுநாளாகியது; மற்றைய நாட்களைப் போலவே தினைப்புனத்திற்குப் புறப்பட்டாள். ஆனால் அன்று ஒரு புது ஆசை, அவனை மீண்டும் காண மாட்டோமா? என்பதுதான்.

புனத்தையடைந்தாள்; 'புதுமை இது என்னே! என்று வியந்தாள். உள்ளம் கவர் கள்வனைக் கண்டு மகிழ்ந்தாள்... ஆமாம்! அவள் வரு முன்பே அவன் அங்கு வந்திருந்தான், அவள் பார்த்தாள். வியப்பு, விரகம், பெருமை, நாணம் இவையெல்லாம் அதில் வெளியாகின. அவனும் பார்த்தான். ஆண்மை, ஆசை, காதல்... இவையே அவன் பார்வையில் இருந்தன. அன்றும் ஏதோ பேச முயன்றான். ஆனால் முடியவில்லை. பார்த்திருந்து பின் பிரிந்தான். இப்படியே அடுத்த நாளும், அதற்கடுத்த நாளும் வருவான்; பார்ப்பான்; பேசமாட்டான்; பிரிந்து விடுவான்!

ஆண்மகன் அவன், தன் உள்ளத்தைத் திறந்து சொல்லாத போது, தான் மட்டும் எப்படி நாணத்தைவிட்டு, "நான் உன்னைக் காதலிக்கிறேன்" என்று அவனிடம் சொல்வது என்று ஏங்கினாள். ஒரு முடிவுக்கு வரமுடியாமல் வாடினாள். அடுத்த நாள் ஆகியது. ஒரு முன்னேற்றமுமில்லை! இந்த நிலையிற்றான் முன் கூறியபடி தன் நினைவிழந்து பரண்மேல் நின்றிருந்தாள்.

திடீரென்று அவன் வந்தான்; அவள் பார்த்தாள்! நாணத்தை விட்டாவது இன்று அவனுக்குத் தன் உள்ளத்தைக் காட்டி விட வேண்டுமென்று எண்ணினாள், அடுத்த கணமே அவளுக்கு வழி தெரிந்து விட்டது.

பரணிலிருந்து இறங்கினாள்; பக்கத்து மரத்தில் படர்ந்து தொங்கிக் கொண்டிருந்த கொடியைப் பற்றினாள். (அதில்தான் அவளும் அவள் தோழியும் ஊஞ்சலாடுவது வழக்கம்)எங்கோபார்த்துக்கொண்டு நாணம் மிகுந்த குரலில், "என்னைச் சிறுது ஊக்கிவிடுங்களேன்" என்றாள்; இது போதாதா அவனுக்கு. "நல்லது பெண்ணே, ஆட்டுகின்றேன்" என்றான்.

அவன் ஆட்டினான் - அவள் ஆடிக் கொண்டிருந்தாள், ஊஞ்சற்கொடி உயர உயரக் கிளம்பியது. திடீரென்று அவள் கைநழுவ விட்டாள். வேண்டுமென்றுதான் அவள் இப்படிச் செய்தாளென்று அவன் கண்டானா என்ன! விழுகின்றாளாக்கும் என்று தாவிப் பிடித்தான். ஆம் அவளைத் தாவிப் பிடித்தான். தன் உடல்மேல் தாங்கிக் கொண்டான். அசையாது கிடந்தாள் அவள். மயங்கி விட்டாளாக்கும் என்று எண்ணித் தன் மார்போடு சரிந்து படுக்க வைத்தான்.

அவளுக்கோ இன்பம் கொள்ளை. அந்த வேளையில் விழித்துக்கொண்டால், எங்கே "ஊஞ்சல் ஆடியது போதும் பெண்ணே, இனி விட்டிற்குப்போ!" என்று கூறிவிடுவானோ என அஞ்சி, அவள் அப்படி அவன் மார்பில் அசையாது படுத்திருந்தாள். (குறிஞ்சிக்கலி — 1)

இந்த இடத்தில் வந்து தனது பாட்டிற்கு முற்றுப்புள்ளி வைக்கின்றார் கபிலர். தமிழரின் காதல் நூல்களில் ஒன்றாகிய கலித்தொகையில், குறிஞ்சிக்கலி, இந்தக் காட்சியுடன் தான் ஆரம்பிக்கின்றது. எப்படி இருக்கின்றது கபிலரின் கற்பனைத்திறன்? அதைவிட எப்படியிருக்கின்றது நம் முன்னோர்கள் காதலுக்கு அளித்த இடம்.

## டானியல் பூவர்

நல் விளக்கொளிர்ந்து
நலம் பரப்பிய-
நற்பணியே வாழ்க!
தனக் கென வாழா
பிறர்க்கென வாழ்ந்த
நற்குரு பூவரின் நாமம் வாழ்க!

திருப்பணிக்கென
உமை அர்ப்பணித்திட்ட
கலாநிதி பூவர் வாழ்க!
திருப்பணி வழியாய்
இறைவனின் உறவை
வளர்த்தவரே வாழ்க!

இறை மகன் பணியை
கருத்துடன் தொடர்ந்த
மிஷனரியாரே வாழ்க!
இறை குலம் சிறக்க
கல்விககூடம் திறந்த
மிஷனரியாரே வாழ்க!

தனக் கென எதுவும்
பாரினில் கொள்ளா
திரு பூவர் அவர்கள் வாழ்க!
தன் உயிர் தந்து
கிறிஸ்தவம் காத்த
திரு பூவர் நாமம் வாழ்க!
~~~~~~~~~~~~

## உங்களுக்குத் தெரியுமா?

சென்ற இதழ்த் தொடர்ச்சி.

ஒவ்வொரு நிமிடமும் உலகில் 120 குழந்தைகள் பிறக்கின்றன. இலங்கையிலும் ஒவ்வொரு மணித்தியாலமும் குழந்தைகள் பிறந்து கொண்டே இருக்கின்றன. அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளில் சனத்தொகை அதிகரிப்பினால், சூழல் மாசடைகின்றது. அத்துடன் மக்களுக்கு வேண்டிய பணிகளையும், வசதிகளையும் கவனிக்க இயலாமற் போகிறது. உலக சனத்தொகை 5 மில்லியனுக்கு மேலாய்க் கூடி கி. பி. 2000 ஆண்டில் 6.12 பில்லியன் ஆகிவிடுமென எதிர் பார்க்கப்படுகிறது.

தற்போது பாவிக்கப்படும் 80,000 இரசாயனப் பொருள்களில் அதிகமானவை தவறான முறையில் பாவிக்கப்படுவதனால் மக்களுக்கு தீங்கு இழைக்கின்றன. இவை உற்பத்தி செய்யப்படும் பொழுதும் பாவிக்கப்படும் பொழுதும் நச்சுப்புகைகளை வெளிவிடுகின்றன. தொழிற் சாலைகளிலிருந்து வெளியேற்றப்படும் கழிவுப் பொருள்களும் தரைகீழ் நீருக்கு நஞ்சு ஊட்டுகின்றன. இலங்கையில் 13.000 மக்கள் ஒவ்வொரு ஆண்டும் கிருமிநாசினியினால் பாதிக்கப்படுகின்றனர். இவற்றுள் 10 வீதம் மக்கள் இறக்கின்றனர்.

இலங்கையின் வன வாழ்க்கைக்காக ஒதுக்கப்பட்ட பரப்பளவு 2500 சதுர மைல் ஆகும் இது. இலங்கையின் மொத்தப் பரப்பளவில் 10 வீதமாகும். 50 ஆண்டுகளுக்கு முன் 40.000 புலிகள் இருந்தன. ஆனால் இன்று அவை 2500 ஆகக் குறைந்து விட்டன. 85 வகையான முலையூட்டிகளும், 400 வகையான பறவைகளும், 1500 க்குக் குறைவான காட்டு யானைகளும் உண்டு. உலகிலே விலங்கினம் அருகிக் கொண்டு வருகிறது. இப்புவியில் 300 வகையான முலையூட்டிகள், 400 வகையான பறவைகள், 200 வகையான ஊர்வனவும், 100 வகையான மீன்களும் உள்ளன. ஏறக்குறைய 15 மில்லியன் வகையான பூச்சிகள் வாழ்கின்றன. இவை சூழலின் அமைப்புக்கு இன்றியமையாதவை. இவற்றுள் 20 வீதம் மனிதனுக்கு உபயோகமானவை. 2 வீதம் தீங்கு இழைப்பன.

அயன மண்டலக்காடுகள் 20வீதம் அல்லது 2970 மில்லியன் ஹெக்டர் நிலப்பரப்பாகும். எனினும் அவை அருகிக்கொண்டு போகின்றன. எல்லையுள்ள காடுகள் ஒரு ஆண்டுக்கு 7.5 மில்லியன் ஹெக்டர் ஆகவும் திறந்த காடுகள் ஒரு ஆண்டுக்கு 3.8 மில்லியன் ஹெக்டர்களாகவும் குறைகின்றன. ஒவ்வொரு நிமிடமும் 21.5 கெக்டர்ஸ் அயனமண்டலக் காடுகள் அழிக்கப்படுகின்றன. இலங்கையில் ஆண்டுதோறும் 30.000 ஹெக்டர் காடுகள் அழிக்கப்படுகின்றன. இயற்கைக் காடுகளின் பரப்பளவு ஏறக்குறைய 1.55 மில்லியன் கெர்க்டஸ் ஆகும்.

ஏறக்குறைய 3500 மில்லியன் கெக்டர்ஸ் நிலம் பாலைவனமாக மாறுகின்றன. ஒவ்வொரு ஆண்டும் 6 மில்லியன் கெக்டர்ஸ் நிலம் பாலைவனமாகின்றது. 21 மில்லியன் கெக்டர்ஸ் நிலம் தரம் குறைந்து பயிர்ச் செய்கைக்கு உதவாமல் போகிறது. இதனால் பாதிக்கப்படும் கிராம வாசிகளின் தொகை 135 மில்லியனாகும். உலகின் நிலப்பரப்பில் மூன்றில் ஒரு பங்கும் 850 மில்லியன் வறிய மக்களும் பாதிப்படைய நேரிடும்.

உலகின் 265,000 தாவர வகையில் 60,000 வகைகள் அழிந்துபோகும் நிலையில் இருக்கின்றன. உலகிலே நாம் உண்ணக்கூடிய தாவர வகைகள் 20,000 உண்டு. ஆயினும் அவற்றுள் 20 வகைகளையே நாம் அதிகமாக உண்போம். 20 வகைகளில் மட்டும் நாம் தங்கியிருப்பது தவறு.

---

## நூறாண்டு வாழ நடந்து பழக வேண்டும்.

16-6-1988 இதழின் தொடர்ச்சி

சற்று வெளியே சென்று உலவி வீட்டு வருவதன் மூலம் தசைகளை சற்றுத் தளர்த்திவிட்டு, சில கலோரிகளையும் எரித்துக் கொள்ளலாம்.

ஆனால் சற்று முயற்சி எடுத்து திட்டமிடுவதன் மூலமும், தொடர்ந்து சுறுசுறுப்பாக நடைபோடுவதன் மூலமும் பின்வரும் சிறந்த பலன்களை அளிக்கக் கூடிய உடலை, தகுதியான நிலையில் வைத்துக் கொள்ளக்கூடிய திட்டத்தை உருவாக்கிக் கொள்ளலாம்.

நடத்தல் மிகச் சிறந்த ஒரு பயிற்சி. அது இருதயத்தையும் நுரையீரல்களையும் நன்கு பலப்படுத்திக் கொள்ள உதவும்.

உடலில் எடை அதிகரிக்காமல் பார்த்துக்கொள்ளலாம் அல்லது திட்டமிடப்பட்ட உணவின் மூலம் எடையைக் குறைத்துக்கொள்ளலாம்.

எலும்புகளில் ஏற்படும் இழப்பிற்கு (Osteoporosis) எதிராகப் போராடலாம்.

உடலை வலுப்பெறச் செய்து அதன் பயனாக ஏராளமான சக்தியைப் பெற்றுக் கொள்ளலாம்.

ஆழ்ந்த நித்திரை நம்மைத் தேடிவரச் செய்யலாம்.

மூட்டுக்கள், தசைநார்கள், தசைத்தளைகள் ஆகியவற்றின் விறைப்பினைக் குறைத்து வலுப் பெறச்செய்யலாம்.

நடப்பதற்கு உதவும் தசைகளை வலுவுள்ளதாக்கி மேம்பாடடையச் செய்யலாம்.

உடலின் மேற்பகுதி, கெண்டைக்கால் பகுதி, புட்டம், இடுப்பு, அடிவயிறு, தொண்டை ஆகிய உறுப்புக்களை உரமுள்ளவைகளாக்கலாம்.

மன இறுக்கத்தைப் போக்கி மனப்பாங்கை மேம்படச் செய்யலாம்.

மேலும் நடந்தலானது இரத்த அழுத்தத்தையும் கொலஸ்டிராலையும், அமிலங்களையும் (Triglyceride) குறைக்க உதவிசெய்யும்.

நடத்தலானது நீங்கள் உற்சாகத்தோடும் மகிழ்ச்சியோடும் இருக்க உதவுகிறது. அதன் விளைவாகவே நீங்கள் உடல் நலத்தோடு நீண்ட காலம் வாழ உதவிக்கரம் நீட்டுகிறது.

❀ ❀ ❀ ❀ ❀

## உள்ளூர்ச் சபைகளின் அருட்பணி பற்றிய திருநோக்கு.

அருட்பெருந்திரு, டாக்டர் P. விக்டர் பிரேமசாகர்

சபை மக்கள் பெறவேண்டிய ஆயத்த நிலையும் பணிமுறைத் திருப்பமும்.

தென் இந்தியத் திருச்சபை உருவாகிய நிகழ்ச்சி பெந்தேகொஸ்தே நாளுக்குப் பின்னால் நடந்தேறிய மாபெரும் அற்புதமாகக் கருதப் படுகிறது. இந்த ஐக்கியத் திருச்சபை தோன்றியதன் நோக்கம், அது மற்றுமொரு சபைப் பிரிவாக இருப்பதற்கன்று. உலகம் முழுவதிலும் உள்ள கிறிஸ்துவின் திருச்சபையை ஐக்கிய நெறிக்குட்படுத்தும் இயக்கமாக விளங்குவதற்காகவே அது தோன்றலாயிற்று. திருச்சபை உண்மையில் ஒரு பயணித் - திருச்சபை என்பது இப்போது உணரப்பட்டு வருகிறது. அது, தன் ஆண்டவரின் கட்டளைக்கு அடிபணிந்து தன் பயணத்தில் முன்னேறிச்செல்லும் சபையாக இருந்திடவேண்டும் என்பதும், உள்ள நிலையிலேயே ஊறிப் போய் நிற்காமல் இன்றைய சமுதாயத்தில் உப்பாகவும், ஒளியாகவும், புளித்த மாவாகவும் இயங்கி உயிர்ப்புடையதொரு ஒருமைப்பாட்டு நிலையை உருவாக்கும் முயற்சியில் ஈடுபடவேண்டும் என்பதும், ஆண்டவரின் ஆணைக்கு இணங்கப் புதுவகையில் தன் பணிவடக்கநெறியை மேற்கொள்ளவேண்டும் என்பதும் இப்போது நாம் அறிந்துவருகின்ற உண்மைகள் ஆகும். தென்னிந்தியத் திருச்சபை கடந்த ஆண்டுகளில் பாப்திஸ்து. லூத்தரன் மற்றும் வட இந்தியத் திருச்சபை, மார்த்தோமா திருச்சபை ஆகியவற்றோடு பேச்சுவார்த்தைகள் நடத்தி இந்தியத் திருச்சபை எவ்வகையிலெல்லாம் அருட்பணியில் இந்நாட்டிலும் அகில உலகிலும் ஈடுபடவேண்டும் என்பதைப்பற்றிச் சிந்தித்து வந்துள்ளது.

கடந்த 40 ஆண்டுகளில் தென் இந்தியத்திருச்சபை வெளியிட்டுள்ள கீழ்க்கண்ட மூன்று நூல்களில் இத்தகைய ஈடுபாட்டுப்பணியைப்பற்றிய மதிப்பீடுகள் இடம்பெற்றன. அந்நூல்கள் ஆங்கிலத்தில் எழுதப்பட்டுள்ளன.

1. Renewal and Advance, Integration and Joint Action, 1963
2. CSI After Thirty Years: A Report on the Life and Work of the Church, 1979.
3. Priorities for the Mission of the Church. 1982.

இச்சபையின் வாழ்விலும் பணியிலும் ஏற்பட்டுள்ள வளர்ச்சியை இந்நூல்கள் எடுத்துக்காட்டுகின்றன. இச்சபையின் முதல் 20 ஆண்டுகளில் ஒருமைப்பாடு மற்றும் அருட்பணித்துறையில் இணைந்து செயற்படுதல் ஆகியவற்றுக்குச் சிறப்பிடம் தரப்பட்டுள்ளதை 'Renewal and Advance' என்ற தலைப்பிலிருந்து தெரிந்துகொள்ளுகிறோம். பல சபைகள் இணைவதன்மூலம் ஏற்படும் ஐக்கியம் அச்சபைகளின் அருட்செய்திப் பணியை வலுப்படுத்தும் என்பது அக் காலகட்டத்தில் முழுமையாக உணர்ந்துகொள்ளப்படவில்லை, என்று அருள்தந்தை மார்க் கிப்பார்டு (Fr. Mark Gibbard) தம்முடைய 'Unity is not Enough' என்னும் நூலில் குறிப்பிடுகிறார். அதற்கு அடுத்த 10 ஆண்டுகளில் தென் இந்தியத் திருச்சபை தன்னுடைய அன்றாட வாழ்க்கையிலும் பணியிலும் கவனம் செலுத்தலாயிற்று என்பதை 'CSI After Thirty Years என்ற நூலின் தலைப்பிலிருந்து அறிய முடிகிறது. 1980-லிருந்து 82-வரையுள்ள காலகட்டத்தில் இத்திருச்சபை தன் சூழ்நிலையை நன்கு புரிந்து கொள்ளவேண்டிய அவசியம் ஏற்பட்டது. அதன் விளைவாகத் தன் அருட்பணியில் எவைகளுக்கு முதலிடம் தருவது என்னும் திட்டத்திற்கு (Priorities For the Mission of the Church) முக்கியத்துவம் தரப்பட்டது. இதையொட்டிய தென் இந்தியத் திருச்சபையின் அலுவலக மையம், திருச்சபையின் பல்வேறு பணிகளுக்கு ஏற்பப் புதிய துறைகளையும் குழுக்களையும் அருட்தொண்டர் பயிற்சித் திட்டம் (Diaconal Training Programme) போன்றவற்றையும் ஏற்படுத்தலாயிற்று.

மனிதவள மேம்பாட்டுத் துறையை வலுப்படுத்தித் தகுந்த நபர்களைத் தகுந்த பணிகளில் அமர்த்துவதற்கான உந்துதலை உலகத் திருச்சபை மன்றத்தைச் (WCC) சேர்ந்த திரு. சாம் ஐசக் அளித்துள்ளார். அவ்வண்ணமே அருள்திரு. டாக்டர் கிறிஸ்டோபர் துரைசிங் அருட்பணிக்காக உள்ளூர்த் திருச்சபைகளைத் தகுந்த முறையில் ஆயத்தப்படுத்துவதின் அவசியத்தை வலியுறுத்தியுள்ளார். அதன் விளைவாகத் தென் இந்தியத் திருச்சபையின் பல்வேறு துறைகளும் திருச்சபையின் அருட்பணிக்கான அடிப்படைத் தளங்களாக உள்ளூர்ச் சபைகளில் தங்கள் கவனத்தைச் செலுத்தலாயின. இவ்வண்ணம் உள்ளூர்ச் சபைகளுக்கு முதல் வரிசை முக்கியத்துவம் தரப்பட்டு வருகிறது. அதோடு இதுவரை ஒதுக்கப்பட்டு வந்த சமுதாயம்—பொருளாதார அரசியல் தளங்கள் உள்ளூர்ச் சபைகளின் அருட்பணிக்கு இன்றியமையாதவை என்றும் சபைகளில் உணரப்பட்டு வருகிறது.

டாக்டர் றேமண்ட் ஃபுங் (Raymond Fung) என்பவர் உள்ளூர்த் திருச்சபைகள், சிறுவர், வயது சென்றோரோடு தொழிலாளர்கள் தம் பிரச்சனைகள் மீதும் (ஏசா- 65: 17-25) தன் கவனத்தைச் செலுத்தி உள்ளூர்ச் சூழ்நிலைகளில் மாறுதல்களை ஏற்படுத்தி அங்கெல்லாம் யாவருக்கும் நிறைவான வாழ்வு கிட்டும்படி செய்யவேண்டும் என்று அண்மையில் தம்முடைய கட்டுரை ஒன்றில் தெரிவித்துள்ளார்.

இங்ஙனம் உருவாகிவரும் நற்சாட்சித் திட்டத்தில் அகில உலகத் திருச்சபையின் உள்ளூர் வெளிப்பாடுகளாக விளங்கும் உள்ளூர் சபை - சமுதாயங்கள், உள்ளூர் அளவில் அருட்பணியில் நெறிப்படுத்தப்பட வேண்டியதன் அவசியம் உணர்ந்து வரப்படுகிறது.

— தொடரும் —

❀ ❀ ❀ ❀ ❀

## யாழ். தொழில் நுட்ப நிறுவனப் பதில் பணிப்பாளர் கூறுகின்றார்.

கேள்வி: யாழ்ப்பாணக் கல்லூரி தொழில் நுட்பக் கல்வி நிறுவனத்தின் ஸ்தாபகம் பற்றியும் அதன் நிர்வாகம் பற்றியும் கூறுவீர்களா?

பதில்: 1973 ஆம் ஆண்டு யாழ்ப்பாணக் கல்லூரி அதன் 150 ஆவது ஆண்டு நிறைவு விழாவைக் கொண்டாடியது. இந்த விழாவின் ஒரு வடிவமாக இரண்டு நிறுவனங்கள் ஸ்தாபிக்கப்பட்டன. ஒன்று, யாழ்ப்பாணக் கல்லூரி விவசாய நிறுவனம். இது, மருதனாமடத்தில் அமைந்திருக்கிறது. மற்றது வட்டுக்கோட்டையில் உள்ள யாழ்ப்பாணக் கல்லூரித் தொழில் நுட்பக் கல்லூரி.

இந்த நிறுவனம் யாழ்ப்பாணக் கல்லூரி நிர்வாகக் குழுவிற்கு உரியது ஆயினும் முற்றிலும் சுயஆதிக்கமுடைய கவுன்சில் ஒன்றில் நிர்வகிக்கப்பட்டு வருகிறது.

கேள்வி: இந்த நிறுவனத்தின் முக்கிய நோக்கு யாது?

பதில்: எமது பிரதேசத்தில் உள்ள இளைஞர்களின் ஆற்றல்களும் திறமைகளும் விரயமாகிப் போகாமல் பாதுகாப்பதுடன், அவர்களுக்குத் தொழில்நுட்பக் கல்வியை வழங்குவதன் மூலம் சமூகத்திற்குத் தேவையான மனித வளத்தை உருவாக்கி விருத்தியும், செய்லாம் என்பதே இக்கல்லூரியின் நோக்கம்.

2ம் பக்கம் பார்க்க)

**தாரகை ஒளி:-**

காயத்தின் தழும்பும் உள்ளுறை யடிகளும்;
பொல்லா தவனை யழுக்கறத் துடைக்கும்.

— நீதிமொழிகள். 20 : 30

# எங்கள் கருத்து

## திருமறைக்குத் திரும்புங்கள்!

நமது திருமறை ஒரு கட்டுக் கதை நூலல்ல. கவிஞனின் வெறும் கற்பனையுமல்ல. அது, ஆண்டவரின் அருள்வாக்கு. இறையரசின் அறிவிப்பு. இதில், மீட்பின் நற்செய்தியுண்டு. படிக்கப் படிக்க உள்ளத்தில் உவகையளித்து நம் அகத்தில் அமைதியை வழங்கும் இது, நம் வாழ்விற்கு வழிகாட்டும் வளமான நூல்.

இறைவனின் உயிர்ப்புள்ள வார்த்தை இத்திருநூலில் பொதிந்துள்ளது. இவ்வார்த்தையின் ஆற்றலை அறிந்துள்ள நாம், அவ்வார்த்தையின் வழியாக எமது விசுவாசத்தைப் புதுப்பிக்கவும் அறிக்கையிடவும், மக்கள் அனைவரும் மனமுவந்து ஆண்டவரின் குரலொலிக்குச் செவிசாய்க்கவும், அதன் ஒளியில் வழி நடத்தப்படவும் இறைவனிடம் வேண்டுவது நம் கடமை.

மனிதன் அப்பத்தினால் மட்டுமன்று கடவுளின் வாயினின்று புறப்படும் ஒவ்வொரு வார்த்தையினாலும் உயிர்வாழ்கிறான் என்பது அருள்வாக்கு. இதற்கு ஏற்ப, நாம் இவ்வுலகக்கவலைகளினின்று விடுவிக்கப்பட்டு, இறைவனின் வார்த்தைக்குச் செவிசாய்த்து, திறந்த உள்ளம் கொண்டவர்களாக வாழ அருள்புரிய வேண்டுமென இறைவனிடம் மன்றாடுவது அவசியம்.

விண்ணரசு நெருங்கிவிட்டது, மனம் திரும்பி நற்செய்தியை விசுவாசியுங்கள் என்று கூறிய இறைமைந்தனே, நாம் என்றும் அவரை எதிர்நோக்கி வாழ நமக்கு அருள் புரிவார். இறை வார்த்தையே எம் வாழ்வின் பாதைக்கு ஒளி. எனவே எம் அகஇருள் அகன்று ஒளிர வாழ்வு தரும் வார்த்தைகளை எமக்கு என்றும் அளிக்கும் இறைவன், நாம் சோதனைகளால் சோர்ந்து தளர்ச்சியுற்றிருக்கும் தருணங்களில் தமது வார்த்தையால் புத்துயிர் அளிப்பார்.

உயிரும் உயிர்ப்புமாய்த் திகழும் இறைவன், நம் வாழ்வின் இறுதி நாளில், அவரின் வருகைக்கு நாம் ஆயத்தமாயிருக்கவும், உயிர்ப்பின் வழியாய் அவருடன் ஒன்றித்திருக்கவும் அருள் வழங்குவார், நம்பிக்கையுடன் வேண்டுகின்றவர்களுக்கு!

"பற்பல முறையினும் பல்வேறு வகையிலும் இறைவாக்கினர் வாயிலாக நம் முன்னோரிடம் பேசிய கடவுள், நாம் வாழும் இவ்விறுதி நாட்களில் நம்மிடம் தம் மகனின் வாயிலாகப் பேசியுள்ளார்" (எபி 1: 1, 2) என்பதில் ஐயமில்லை. ஆகவே, ஆதியிலிருந்து தமது வார்த்தையினாலே உலகை வழிநடத்தி வருகிற இறைவன், நாம் என்றும் அவரின் குரலுக்குச் செவிசாய்க்கவும், அவரது உயிர்ப்புள்ள வார்த்தையின் பணிக்கு நம்மை மனமுவந்து ஒப்படைக்கவும் முன்வாருங்கள்.

இப்பொல்லாத நாட்களில், தீமையின் இருள் எங்கும் சூழ்ந்துள்ள வேளையில் அனைவர்க்கும் ஒளியாய்த் திகழ்வது நமது திருமறை. உண்மை வழி காணவேண்டுமா? தீமையகற்றி நன்மையை நாட வேண்டுமா? தளர்ச்சியைப் போக்கி, மனப்பயம் நீக்கி, உயிர்ப்புடன் மக்களுக்குப் பணி செய்ய வேண்டுமா? அப்படியாயின் திருமறைக்குத் திரும்புங்கள் - ஒழுங்காக நாள்தோறும் வாசியுங்கள் - சிந்தியுங்கள் - செபியுங்கள்: நிறைவான வாழ்வைப் பெறுவீர்கள்.

திருமறையை வாசியுங்கள்!
வாசித்ததைச் சிந்தியுங்கள்!
சிந்தித்ததின்படி செபியுங்கள்!
வாழ்வு வளம்பெறும்!!

---

(இம்மாதம் 19ஆம் நாள், — மரியன்னை பேராலயத்தில் நடத்தப்பட்ட குருத்துவத் திருநிலைப்படுத்தும் திருவழிபாட்டில் பாடப்பட்ட பாடல் இது.)

பல்லவி

ஆண்டவரே பரிசுத்த குருக்களை நீர் தாரும்
அருள் வாழ்வில் உம் குருக்கள் வாழ அருள்கூரும்.

சரணம்

இறைமகனின் திருப்பணியைத் தொடர்ந்தெங்கும் ஆற்ற
இருள்சூழ்ந்த உலகினிலே அருள்விளக்கை ஏற்ற
வாழ்வளிக்கும் உண்மைகளை உலகிற்கு வழங்க
வற்றாத பேரன்பின் ஊற்றாகத் திகழ (ஆண்டவரே)

நெஞ்சிற்கு நிறைவளிக்கும் இறைவனையே புகழ
நிலவுலகில் அமைதியின் தூதுவராய்த் திகழ
நஞ்சான கொள்கைகளை அஞ்சாமல் தூக்க
நலஞ்சேர்க்கும் நெறிகள்தனை பலமாகக் காக்க (ஆண்டவரே)

புனிதத்தின் நறுமணத்தைப் புவியெங்கும் சேர்க்க
புண்ணான நெஞ்சத்தில் புத்துயிரை வார்க்க
கருணையிலே தந்தையெனத் தாயெனவும் இலங்க
கற்புநிறை வாழ்வுக்குக் காவலராய்த் துலங்க (ஆண்டவரே)

தீமையெனும் நோய் தீர்க்கும் மருத்துவராய் மிளிர
திரிபோல் எரிந்துருகும் தியாகிகளாய் ஒளிர
திருவருளின் சாதனத்தால் இறை உயிரை ஊட்ட
திருச்சபையாம் இறையரசை நாடெல்லாம் நாட்ட (ஆண்டவரே)

## தெல்லிப்பளை மிஷன் கல்லறைத் தோட்டத்தில் ஆராதனை.

காலை ஆராதனை முடிந்ததும் அனைவரும் வாகனப் பவனியாக, தெல்லிப்பளையில் உள்ள மிஷன் கல்லறைத் தோட்டத்திற்குச் சென்று அங்குள்ள டாக்டர் டானியேல் பூவரது கல்லறையிலும், அங்குள்ள மற்ற மிஷனரிமாரின் கல்லறைகளிலும் மலர் வளையங்கள் சாத்தினர். அமெரிக்க நாட்டின் இலங்கைத் தூதுவர் மாண்புமிக்க திரு. எட்வேர்ட் மார்க்ஸ் அமெரிக்க நாட்டின் பெயராலும், யாழ். பல்கலைக் கழகத் துணைவேந்தர் பேராசிரியர் துரைராசா, கல்வித் துறையின் பெயராலும், பேராசிரியர் கே. கிம் ஆசிய கிறிஸ்தவ மன்றத்தின் பெயராலும், டாக்டர் பிரேமன் நயில்ஸ் அனைத்துலகத் திருச்சபை ஒன்றியத்தின் பெயராலும், டாக்டர் தயன் சன்ட் கார், தென் இந்தியத் திருச்சபைப் பேரவையின் பெயராலும், டாக்டர் பொப் போர்ட்டர், அமெரிக்க மிஷன் சங்கத்தின் பெயராலும், மலர் வளையங்களை வைத்தனர். பேராயர் அம்பலவாணர் அவர்கள் நன்றி செலுத்தும் செபத்தைச் செய்து ஆசீர்வாதம் கூறினர்.

அனைவர்க்கும், தெல்லிப்பளைக் குரு இல்ல முன்றலில் தேநீர் விருந்துபசரணை தெல்லிப்பளைச் சபையினரால் அளிக்கப்பட்டது. இதன் பின், அனைவரும் வட்டுக்கோட்டைக்குத் திரும்பினர்.

## உடுவில் மகளிர் அளித்த நாடகக் கண்காட்சி.

காலை 12.00 மணியளவில், உடுவில் மகளிர் கல்லூரி மாணவர் அளித்த நடனங்கள், சிறப்புப் பாடல்கள், டானியேல் பூவரது வரலாற்றைச் சித்தரிக்கும் நாடகக் கண்காட்சி ஆகியன இடம்பெற்றன. பேராயர் அம்பலவாணர் அவர்கள் தலைமையில் இவ் வைபவம் நடைபெற்றது.

இவர்கள் அளித்த வரலாற்று நாடகம், கிறிஸ்தவ இறையியல் கல்லூரி மாணவன் திரு. பி. லோகநாதனால் எழுதப்பட்டது. யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர் திரு. மௌனகுரு அவர்களால் பழக்கப்பட்டது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

## விருந்துபசரணை.

இவ் விழாவில் பங்கெடுத்த அனைவர்க்கும் நண்பகல் விருந்து அளிக்கப்பட்டது. ஏறக்குறைய ஆயிரத்து ஐந்நூறுபேர் இவ் விழாவில் சமூகமளித்தனர். நல்ல முறையில், விருந்தை ஒழுங்கு செய்த திரு. எஸ். இரத்தினவேல் அவர்களின் திறமையை, அனைவரும் பாராட்டியது இங்கு குறிப்பிடத்தக்கது.

## பொதுக் கூட்டம்.

இவ் விழாவின் இறுதிக் கூட்டம் பிற்பகல் 2.30 மணிக்கு, பேராயத்தின் திருக்கோவிலில், பேராயர் அருள்மிகு டி. ஜே. அம்பலவாணர் அவர்கள் தலைமையில் நடத்தப்பட்டது. தொடக்க வழிபாடு, அருட்திரு. டி. ஆர். அம்பலவாணர் அவர்களால் நடத்தப்பட்டது. இவ் விழாவின் பிரதம விருந்தினராகிய அமெரிக்க நாட்டின் இலங்கைத் தூதுவர் திரு. எட்வேர்ட் மார்க்ஸ் சிறப்புச் சொற்பொழிவாற்றினர்.

இதன்பின், பின்வருவோர் தமது சபைகள், நிறுவனங்கள் பெயரால் வாழ்த்துச் செய்தி வழங்கினர். அவர்களின் விவரங்கள் பின்வருமாறு;

பேராசிரியர் கே. கிம்- கிறிஸ்தவ ஆசிய மன்றம், டாக்டர் - பிரேமன் நயில்ஸ் -அனைத்துலகச் சபையியக்க மன்றம், டாக்டர் தயன்சன்ட் கார்- தென் இந்தியத் திருச்சபைப் பேரவை, டாக்டர் பொப் போர்ட்டர்- அமெரிக்க மிஷன் சங்கம், அருட்திரு பிதா ஜெயசீலன்— றோமன் கத்தோலிக்கத் திருச்சபை, அருட்திரு. கே. கோவிந்தராஜ்— இலங்கை மெதடிஸ்த திருச்சபை, அருட்திரு. யே. சர்வானந்தன்— அங்கிலிக்கன் திருச்சபை, டாக்டர் எஸ். ஜெபநேசன் முதல்வர், யாழ். கல்லூரி, இவர்கள் அளித்த செய்தி, யாழ். பேராயத்தின் வருங்காலத் திருப்பணிக்குப் பேருக்கம் அளித்தது.

இதன்பின், யாழ். பல்கலைக்கழகத் தமிழ்த் துறைப்பேராசிரியர் கே. சிவத்தம்பி, யாழ் பொதுமக்கள் சார்பில் தமது வாழ்த்துச் செய்தியை வழங்கினர். இதன்பின், பேராயத்தின் செயலர் அருட்திரு. ஏ ஜெயக்குமார் நன்றியுரை வழங்கினர். பேராயரின் செபத்துடனும் ஆசீர்வாதத்துடனும் கூட்டம் நிறைவுற்றது.

டாக்டர் எஸ். ஜெபநேசன் எழுதிய வண. டாக்டர் டானியேல் பூவரின் வாழ்க்கை வரலாறு நூல், அனைவர்க்கும் இலவசமாக அளிக்கப்பட்டது. விழாவின் இறுதி நிகழ்ச்சியாக மரநாட்டுவிழா வைபவம் நடந்ததுடன், அனைவர்க்கும் தேநீர் விருந்துபசரணை நடத்தப்பட்டடு, விழா இனிது சிறப்பெய்தியது.

## யாழ். கல்லூரி.

(5 ஆம் பக்கத் தொடர்ச்சி)

உதாரணமாகக் கூறுவதானால் யாழ். மாவட்டத்தில் ஓராண்டில் சராசரியாக 20 ஆயிரம் இளைஞர்கள் ஜீ. சி. ஈ. சாதாரண தரப்பரீட்சைக்குத் தோற்றுகிறார்கள். இவர்களில் சுமார் 6 ஆயிரம் பேர் அளவிலேயே, ஜீ. சி. ஈ. உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றுகிறார்கள்.

இவ்வாறு உயர்தரப் பரீட்சையில் தோற்றுபவர்களில் சுமார் ஆயிரம் பேரளவிலேயே பல்கலைக் கழகத்தின் பல்வேறு துறைகளுக்கும் தெரிந்தெடுக்கப்படுகிறார்கள், பல்கலைக்கழகக்கல்வி வாய்ப்பைப் பெறாத மிகுதி 19 ஆயிரம் பேரின் கதி என்ன? அவர்களுடைய எதிர் காலம் யாது?

இவ்வாறு உயர் கல்வி வாய்ப்பை இழந்த இளைஞர்களுக்கு, தொழில் நுட்பக் கல்வியை வழங்குவதன் மூலம் அவர்களது எதிர் காலத்தை உறுதியானதாக்க முடியும். தொழில் நுட்பக்கல்வி பெற்று அவர்கள் பிரதேச அபிவிருத்திக்கு பங்களிக்கவும் முடியும்.

கேள்வி: உங்கள் தொழில் நுட்பக் கல்லூரிக்குரிய விசேடமான சிறப்பம்சங்கள் என்று எவற்றை நாம் குறிப்பிடலாம்.

பதில்: முழுநேரப் பொறியியல் தொழில் நுட்பப் பயிற்சி நெறியினை வழங்கும் ஒரேஒரு தொழில் நுட்பக் கல்லூரி இதுவாகும். வடக்குக் கிழக்குப் பகுதிகளில் இவ்வாறான தொழில் நுட்பக் கல்வி நிறுவனம் வேறு எதுவும் கிடையாது.

அனைத்துப் பயிற்சி நெறிகளும் ஆங்கிலத்திலேயே போதிக்கப்படுகின்றன.

தமிழ் மொழிமூலம் ஆரம்ப இடைநிலைக்கல்வியைப் பயின்றுவிட்டு, தொழில் நுட்பக் கல்வி பெறவரும் மாணவர்களுக்கு ஆங்கில மொழியில் ஏற்படும் தடங்கல்களை நீக்குவதற்காக வாரம்

( continued from page 2 )

the safety of our children and our families, wax eloquent about what other people and their children ought to be doing.

Having said that, I however, want to share some general thoughts with you. First of all, I am glad that the Board of Trustees has in the recent past made it a practice to invite the Principals of Jaffna College and Uduvil to be present at their annual or bi-annual meetings. The missionary movement must come of age sometime when it should be appropriate for those who were thought to sit in darkness to respond with a vision of the gospel as seen by new voices and new faces. Those that sit in darkness are not necessarily those in Asia and Africa. On the contrary, a certain darkness has descended upon the West and they need to hear the gospel of the Christ of the Asian road and the Christ of the African road. In a real sense, Dr. Jebanesan, you are today a missionary from Jaffna to the United States, and God fulfills himself in many ways.

Finally, even as we sit here, momentous Changes are taking place. The Communist world is beginning to unravel. In 1967, I remember Professor Mukerjee telling us in his political science lectures that he would be surprised if any of us at age 19 were not Communists. "It is a new idea," he said, "It is exciting and you want to change the world." Then he said, "If by 19 you are not a Communist, you are a fool. But if you remain a Communist by the time you are 23, you are damned fool." He also went on to say "any revolution that becomes an end in itself and not a means to an end will always enslave the very people on whose behalf it takes up arms." The Russian revolution, the Cuban revolution, and most recently, the Iranian revolution, are classic examples of this. Not one of the Ayatollah's closest associates when he was in exile in Paris is with him now. They have all been executed, imprisoned, or fled the country. And now in China and in Russia, the common people wonder why a few people in the party have the good life while everybody else goes without.

Dr. Jebanesan, our peoples troubles have to end someday maybe soon, but how that day will come and when it will come we do not know. But when it does come will we be ready? Will our children be ready for peace?

When UNESCO was founded after the Second World War, somebody included a poem in its charter and I would like to quote the last verse of that poem because I think it is very appropriate.

Since wars begin in the
minds of men, it is in
the minds of men that
we have to erect the
ramparts of peace.

We pledge to you tonight our loyalty and our affection. You carry with you our prayers and our hopes for a better day for our people and our school.

*— SPEECH DELIVERED BY DR. S. A. CHAMPION AT THE JAFFNA COLLEGE ALUMNI MEETING IN TORONTO ON 3 - 6 - 1989. —*

# WOMEN.

Women are a pain in the neck,
If you marry one you'll be a wreck,
They harass you all the days of your life,
Till you wish you haven't got a wife.

Women are a giddy lot
As touchy as touch - me - not,
you tell them "Someone is sick in bed."
They' ll soon be spreading "He is dead"

They lengthen, they darken and pluck their eyebrows
Till you think they look like cape cows!
They shout on the roads. If they stand in a bus
They jabber, mutter and make a big fuss.

They are forward and grumpy and severely rude,
You find that most women are crude;
They delight in picking out the faults of others
Women themselves are careless mothers.

Ashes to ashes, dust to dust:
Show me a woman whom you can trust !
They'll turn out your pockets and open your purse
Till you begin to swear and to curse.

Most women are more like beasts
Who only sit and wait for good feasts.
So never get married; a Bachelor be
'Course then you'll be happy, wealthy and free!

NEWS:

## Fundamentalism on all sides.

The Salman Rushdie affair refuses to die away. Recently. Muslims from all over Britain marched on Westminister to urge the goverment to extend the blasphemy laws to include Islam in addition to Christianity. This would enable the banning of the book 'Satanic Verses'. Close to thirty thousand, the largest such gathering of Muslims ever in this country participated in what was on the whole a peaceful protest. How ever, it was massed at the end by some factions setting light to the book in question as well as burning an effigy of the author. Some of the younger participants ended up in a head on battle with the police as well. All this in the vicinity of the houses of Parliament.

In case the British public felt that this was yet further evidence of medieval Islamic fundamentalism, they were soon reminded that inflexibility of views applies to other faiths as well. The Lord Chancellor-(the supreme judicial figure) was suspended by his Church - the Free Presbyterian Church of Scotland. His crime? - he had attended the burial services for two of his colleagues - The problem arose because the burials were according to the Roman Catholic Mass. The Free Presbyterian Church, which is ealllisthenic in outlook, considers all Roman Catholic worship as idolatrous! Some even consider the Pope to be the 'Anti-Christ'. Members are forbidden from attending Roman Catholic mass. The Lord Chancellor, who is a very intelligent and highly regarded man, resigned from the Church. This controversy has now resulted in a split in the Church with fourteen of the thirty ministers breaking away.

## The 'Greeting of the West.'

Environmental issues have come to dominate the thinking of both the public and government of the west. Scientific evidence has convinced people that unless steps are taken immediately, mankind as a whole is going to suffer the consequences of unbridled man made pollution.

Of greatest concern is the 'greenhouse effect' which is a gradual warning of the earth. This is due to two main reasons. The ozone layer in the atmosphere which protects the earth from the sun's rays has developed 'gaps' over both poles. This has happened over the last ten years and is due to the release of CFC's (chlorfluro carbons) into the atmosphere. CFC's are used to pressurise contents in aerosol cans and refrigerators. It has been estimated that if we were to stop the use of CFC's altogether today - it would still take another fifty years to restore the ozone layer.

The second main contribution to the 'greenhouse effect' is the increased emission of carbon di oxide into the atmosphere. The use of fossil fuels like coal, oil etc. in ever increasing amounts is the main reason. At the same time the trees which are responsible for absorbing the carbon dioxide are being cut down in ever increasing numbers. Large tracts of rain forest are being cut down especially in the Amazon region and elsewhere in the developing world at an alarming rate.

The consequences of the 'greenhouse effect' are already seen in the increasingly unpredictable and whale behaviour of the weather. The international community is making attempts to co-ordinate efforts to put a brake on mankind's collective suicide attempt. This will include efforts at cutting back on the use of fossil fuels developing alternate sources of energy,energy conservation and very importantly-reforestation. Developing nations will obviously have to be assisted in these efforts by the wealthier nations especially since they are so dependent at this stage on fossil fuels. The environmental issue is a global one and overrides all our regional problems important though those my be. Even in the midst of other problems, our people in the North should make efforts to see that the forest cover is not badly eroded. As attempts are made to settle people, the temptation to clear tracts of forest area is immense, but somehow play its part especially in increasing awareness of this problem and also by involving itself in tree planting programmes. This generation may not benefit, but their grandchildren certainly will.

## Jaffna Principals in London.

Old girls and Old boys of Uduvil Girls' School and Jaffna College were delighted by the brief visit of the Principals of their alma maters to London in May. Miss Chelvi Selliah and Dr. S. Jebanesan spent a few days in London enroute to attend a meeting of the Jaffna College Board of Trustees in Boston, U. S. A. Brief though their stay in London was, it gave both of them the opportunity to meet old friends and alumni of their Schools. For the alumni it was a chance to get first hand news of the considerable progress both schools have been making recently inspite of the prevailing unrest in Jaffna. The Jaffna College Alumni association in Britain is already well established. It was a fortuitous coincidence though, that Miss Selliah was in London at a time when the alumni of Uduvil Girls' school are proposing the formation of a similar body. Her meeting with many of the Uduvil alumni certainly gave them the necessary encouragement to go ahead with these plans. It was interesting that among the Uduvil alumni present were many Old boys!

## The Rev. J. J. Ratnarajah Remembered.

A service of remembrance and thanksgiving was held on the first Anniversary of the death of the Rev. Ratnarajah. The service held on 11th June took place at the residence of his son Jebanandan Ratnarajah in the outskirts of London. It was attended by many relatives and friends. The service was conducted by Brother Ebenezer of the Emmanuel Tamil Fellowship. He also preached the message-in the process of which he highlighted the many remarkable aspects of the Rev. Ratnarajah's life. Special items were rendered. The service was followed by lunch.

## THE 200TH. BIRTH ANNIVERSARY CELEBRATIONS OF DR. DANIEL POOR.

Not everything around was dark and gloomy on Tuesday, the 27th of June, 1989, as political events in the country foreshadowed. The newly renovated Cathedral Church at Vaddukoddai stood majestically in the morning glow spruced up for the occasion with its eight cyclopean pillars and four massive walls, now stretching the entire length, and the near century old partition brought down to give the church its original form and dimension.

A group of little children dancing, to the accompaniment of violin music and song, led the clergy - procession into the church, through the aisle up to the altar - entrance.

The entire church building, full to capacity with a bulge of teenagers and adults in their twenties constituting more than half the congregation was an image change of tremendous significance in our contemporary church annals.

A feature of the Service Order was the provision to lead in the Litany for lay - representatives from the churches of the Diocese and of other laymen to lead sections for the response by the congregation.

The three Bible lessons were read by Mr, W. D. Kulathungam, Miss C. V. Selliah and Rev. Christo Roberts.

*The Sermon*: The Rt. Rev. D. J. Ambalavanar, the Bishop of the Diocese preached the Sermon. Basing his text on Romans, chap: 16, verses 32 and 33, the Bishop said that the event we are celebrating reminds us of Karl Barth's wellknown comment that the biblical injunction "Honour thy father and thy mother" implies a commitment on our part to honour the fathers and mothers of the church. Dr. Daniel Poor came to Jaffna, 173 years ago and made history in our land by demarcating our areas as a church and more importantly by giving the society he demarcated a new complexion.

In his mission he followed the trail of stalwarts as William Carey of the Modern Missionary Movement who opened a new world to his students whom he gathered round him in India by first taking geography lessons with them on Vasco de Gama, Captain Cook and Magallan and their pioneering discoveries. Dr. Daniel Poor followed Carey's footsteps at the Batticotta Seminary where, he opened a new world to the poor students who came under his influence — a new world in Literature, Science, Astronomy, Medicine and Technology.

Dr. Daniel Poor was not only interested in knowledge for knowledge sake but continued his labours in Jaffna and for a time in Madurai with the sole object of eventually "making every knee bend" and every one take a share in spreading the gospel to the uttermost parts of the world.

Today our mission in the light of our missionary heritage is to continue the "struggle" which the old Missionaries waged in bringing god's "kingdom" to this land. The prayer "Thy Kingdom Come" is a prayer which commits us to a revolutionary change in the life of our community.

Through our history of 500 years in Sri Lanka (first under Portuguese, then under the Dutch, then under British, then under Independence) at no time the Bishop said, did the Tamils experience such devastation as during the last ten years.

Our *Struggle* for Peace should not take on merely the colours of a distant vision (*Cogito Ergo Sum* - I think and therefore I am) but the colours of a more important commitment. Our existence itself should constitute the struggle. The task is one of involvement.

It was a British Sociologist who said "The world has cancer and the cancer is man". The World Council of Churches has expressed it in a more benign way by saying that man must become an integral part of his community. The task before us today as a Christian Church is *the struggle* and not only a distant vision.

The Communion Service followed. There were well over 500 persons who partook of the Holy Communion.

At the end of the Service, a group went in a motorcade (8 miles) to place a wreath at the grave of Dr. Daniel Poor at the mission cemetery at Tellippalai. Other pioneers buried at this hallowed spot are: Mrs. Daniel Poor and James Richards - the only member of the "Haystack Five" to reach a foreign field. (The other member Samuel Mills died at sea on his way to West Africa). The Bishop conducted a brief Service at the Mission Cemetery, assisted by Rev. Christo Roberts, the Presbyter of the Tellippalai Church. The members of the Tellippalai Church were at home to the guests.

*'The Entertainment'* programme was in charge of Uduvil Girls' College, whose Orchestra group gave a performance, before the curtain went up on a "pageant" in Tamil marked by its novelty and the dexterity with which each 'actor' played her role before the footlights. Within the narrow compass of a stage and a time frame of 45 minutes were concentrated dialogues, dances, and even side - lights pertaining to missionary endeavours in the 19th century including glimpses into Dr. Poor's Ordination at Newbury Port and his journey on board the *DRYAD* in 1816. The rural scene at "Myliddy" of Dr. Poor the pioneer Missionary in the midst of a people swayed by feelings sometimes of awe and of wonder, sometimes of hostility but all the time of eagerness to listen to his discourses in Tamil and what he (the white man) had to say to them was well depicted.

Particularly colourful and portrayed with a display of intrinsic histrionic talent and an expertise (in costume manner and deportment of a professional standard) was the scene portraying the search of the one sheep that was lost. The flutter of the "search" was well brought out. Inquirers from the village wish to know the quality and breed of the sheep lost, *if it was worth searching for*. The reply of the anxious shepherd with his furrowed brow, was tart "*It is not a sheep of any high breed. It is one of the ordinary kind,*" (Dr. Poor was not merely a scholar of repute. He was primarily an Evangelist).

All the other finer points in the "Pageant" were well brought out equally well by the children of the teen - age group, who participated in it. It is a "performance" where symbolism played a more important part than formal dialogue and on this score, it threw on the participants and those who trained them an immense burden.

As was announced at the beginning it was a "novel" performance to which the Christian church in Jaffna has been introduced as a means of Evangelism at the grass root level. The merit of the performance lies in the success with which the children were able to reflect the life and work of Dr. Poor not in dialogue and song alone but more effectively in symbolism clothed in native garb and easily assimilated by people of other faiths and people of our own faith. "By indirections find directions out" is one of Shakespeare's own favourite dramatic devices.

If theatre is the seed-bed of our culture, then Dr. Mounaguru of the Jaffna University ( Fine Arts Department ) and the teachers (many hands we know were indefatigably involved in this venture) of Uduvil Girls' College deserve our gratitude for acquainting members of our church with an understanding of an important element in our cultural heritage - Tamil Drama in its many novel forms to enrich the 'life of the community.

### THE PUBLIC MEETING.

The Bishop, the Rt. Rev. D. J. Ambalavanar presided over the Public Meeting at 2-30 p. m. in the church, following a brief ceremony at 2-15 p. m. when a corner stone was laid by Mr. Edward Marks, representing the American Ambassador in Sri Lanka, for a three - storey block for the Primary School of Jaffna College which would move, when the building is complete, to the main school campus from its present site in the Cathedral premises.

The speakers at the Public Meeting were: *Mr. Edward Marks*, who brought the greetings of the American Embassy in Sri Lanka, the *Rev. Dr. Dyanchand Carr* who conveyed the greetings from the Church of South of India, *Dr. Preman Niles* who represented the World Council of Churches, and *Prof. Kim Kyung - Jae*, from Seoul Korea who spoke on behalf of the Christian Conference of Asia. Besides our guests, we had our own leaders of our community representing varied interests — Professor Sivathamby, addressing the gathering on behalf of the general community, Dr. Porter speaking on behalf of the UCBWM and Dr. S. Jebanesan on behalf of Jaffna College and missionary education in Jaffna of which Dr. Poor was the fountain head.

A thought generally expressed by all speakers at the Public Meeting overtly or by implication was that the very fact that we have been able to celebrate this event amidst disturbing focal points of instability in the land constituted the finest testimony we can give to Dr. Daniel Poor and the pioneers

At the close of the meeting, the large gathering witnessed a climactic tree planting ceremony in the church premises. Tea and short eats were served for all at 5 00 p. m.

The day's hectic programme ended at about 6 p. m. with a giant stand-by generator installed in the premises, lighting the way home the people even along the main road, after an event in the J. D., C. S. I. annals which revealed a dimension they had not witnessed before in the small and somnolent village of Vaddukoddai, once the home of the BATTICOTTA SEMINARY of Dr. Daniel Poor.

*C. E. R.*

Registered as a Newspaper at the G. P. O. Sri Lanka under No. Q/J /104/ News 89
Printed for the Jaffna Diocese of the Church of South India at American Ceylon Mission Press. 182, 1st, Cross Street Jaffna on Friday 7 JULY 1989 and published by Rev. THEVANESAN, 182, First Cross Street, Jaffna.